# டாக்டர் எம்.ஜி.ஆர்.
# அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## விழுப்புரம் -605 401

# ஆண்டு மலர்

## 2020-2021



# EDITORIAL BOARD

Principal
Dr.D.Ganesan M.Com.,M.Phil.,M.BA.,Ph.D.,

Dr.R.Revathi M.A., M.Phil.,M.A.,(Yoga),Ph.D.,
HOD, Department of Tamil,
Assistant Professor.

D.Elavarasi M.A.,M.Phil.,B.Ed.,NET.,Ph.D.,
Guest Lecturer,
Department of Tamil.

M.Subbalakshmi M.A.,M.Ed.,SET.,NET., Ph.D.,
Guest Lecturer,
Department of Tamil.

Dr. N.Kanimozhi M.A.,M.Phil.,B.Ed.,Ph.D.,
Guest Lecturer,
Department of Tamil.

S.Nageswari M.A.,B.Ed.,TET.,M.A.,(Yoga),M.Phil.,NET.,SET.,Ph.D.,
Guest Lecturer,
Department of Tamil.



முனைவர் **து.கணேசன்** M.Com.,M.Phil.,M.B.A.,Ph.D.,PGDPMIR,ICWA(I).,
கல்லூரி முதல்வர்

பாரத ரத்னா Dr. M.G.R. அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம். 2017–18 ஆம் கல்வியாண்டில் தமிழக அரசால் தொடங்கப்பட்டு செவ்வனே நடைபெற்று வருகிறது. 2000க்கும் மேற்பட்ட மாணவிகள் இங்கு உயர்கல்வி பயின்று வருகின்றனர். ஒழுக்கத்துடன் கூடிய தரமான உயர்கல்வி அளிப்பதே இக்கல்லூரியின் நோக்கமாகும். "செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமைதான் நமது செல்வம்" மற்றும் "முயற்சி திருனையாக்கும்" எனும் நல்கோட்பாடுகளை மாணவிகள் உணர்ந்து தங்கள் வாழ்க்கையில் உயர்வதோடு சமூகமும் நாடும் வளர பாடுபட வேண்டும். மேலும் இங்கு பணியாற்றும் பேராசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும் அதற்கு உறுதுணையாக இருப்பது அவசியமாகிறது. இக்கல்லூரி மென்மேலும் வளர்ந்து அதன் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

– முதல்வர்

# கல்லூரி வரலாறு



**வா**ழ்க்கையில் முன்னேற கல்வி இன்றியமையாத கருவியாகும். சிறந்த தரம் வாய்ந்த கல்வியை அளிக்க விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர்க்காக தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110–ன் கீழே 19.06.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விழுப்புரத்தில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டது.

09.08.2017 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் இக்கல்லூரிக்கு டாக்டர் எம்.ஜி.ஆர்.அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2017–18ஆம் கல்வியாண்டில் பி.ஏ.தமிழ், பி.ஏ.ஆங்கிலம், பி.காம்., பி.எஸ்சி.கணிதம், பி.எஸ்சி. கணினி அறிவியல் ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளுடன் கல்லூரி தொடங்கப்பட்டது.

2018–19 ஆம் கல்வியாண்டில் இளம் அறிவியல் பாடப்பிரிவுகளான இயற்பியல், வேதியியல், புள்ளியியல மற்றும் இளங்கலைப் பாடப்பிரிவான சமூகப்பணி ஆகிய நான்கு பாடப்பிரிவுகளும், துவங்கப்பட்டது. 2019–2020ஆம் கல்வியாண்டில் இளங்கலைப் பாடப்பிரிவுகளாக B.A.,வரலாறு, B.A.,பொருளியல் ஆகிய இரு துறைகள் கொண்டுவரப்பட்டன. மொத்தம் பதினொரு பாடப் பிரிவுகளைக் கொண்டு விழுப்புரம் காமராஜ் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வந்தது.

26.11.2019 செவ்வாய்க்கிழமை அன்று மாண்புமிகு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிச்சாமி அவர்களால் விழுப்புரம், சாலாமேட்டில் கல்லூரியின் புதிய கட்டிடத்தில் துவங்கப்பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மேலும் 2019–2020ஆம் கல்வியாண்டில் பன்னிரண்டு வகுப்பறைகள் மற்றும் இரண்டு ஆய்வகங்கள் கட்டுவதற்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## நோக்கம்:

மாணவிகளின் ஒட்டுமொத்த ஆளுமையையும், அவரவர் துறையின் சிறப்பானதொரு அறிவினையும், ஆற்றலையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இக்கல்லூரி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

**“பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**கல்வியைப் பேணுதற்கே”**

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வாக்கை நனவாக்கி சீரும் சிறப்புமாக இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது என்பதில் ஐயமில்லை.

## YOUTH RED CROSS



## RED RIBBON CLUB ACTIVITIES



Women's Health and Safety

## SPORTS ACHEIVEMENTS










# REPUBLIC DAY





## உலக மகளிர் தின விழா












**Webinar on Aatmanirbhar Abiyan and Self Employment Schemes by FOB Pud...**

நாட்டுநலப்பணி திட்டத்தின் சார்பாக நமது கல்லூரி மாணவிகளுக்கு சுயவேலைவாய்ப்பு பெற்றுத்தரும் நோக்கத்தில் சுயசார்பு இந்தியா மற்றும் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் என்ற தலைப்பில் 13.10.2020 அன்று காணொலி கருத்தரங்கம் நடைபெற்றது.






# CLP CLASS






# TAMILNADU OPEN UNIVERSITY CAMP







# நாட்டு நலப்பணித் திட்டம் – மரக்கன்றுகள் நடும் விழா





# தமிழ்த்துறை



மூன்றாம் ஆண்டு (2018-2021)



# தமிழ்த்துறை மன்ற விழா – 2021






சிறப்புரை: முனைவர் **தி.சுமதி,** M.A.,M.Phil.,B.Ed.,Ph.D., உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குரும்பலூர், பெரம்பலூர்–621107

# DEPARTMENT OF ENGLISH



National Seminar on "Themes and Trends in the English Literary Arena"
was conducted by the Department of English on 30.01.2020








A One-day workshop on "Enhansing communicative competence through Skill-based Inverventions", for the students was organized on 24.09.2019



"English Association Inauguration"
Cheif Guest Mr.Oppili, Times of India
11.02.2021




**International Web Conference on "Remembering T.S.Eliot and Hopkins: Journey to the Waste land and other Works"**
**Dr.V.M.Sundar,** Faculty English Language Centre, Salalah, Sultanate of Oman presided overt this Web Conference.
On 10.07.2020 through Google Meet
(During Covid-19)




**International Webinar on "Enhancing Macro Skills through M-Learning".**
**Dr.Mirunalini,** Specialist in English Language Teaching (ELT), Tutor, TAFE AMEP (Adult Migration English Program), Member of Australian eLearning Association, Australia presided over this Webinar.
On 27.10.2020 through Google Meet
(During Covid-19)




**National Webinar on "Humanism".**
**Dr.K.Sivajothi,**
Professor and Head (Rtd) PG and Research Department of English, Arignar Anna Govt. Arts Collage, Cheyyar presided over this Webinar.
On 25.06.2020
through Google Meet
(During Covid-19)

# DEPARTMENT OF COMMERCE

## வணிகவியல் துறை மன்ற விழா 2021



கருத்துரை: முனைவர் **இரா.முகமது ரியார்ஸ் இக்பால்** M.Com.,M.Phil.,Ph.D.,
இணைப் பேராசிரியர் (ம) துறைத்தலைவர் (ஓய்வு), வணிகவியல் துறை.
நாள்: **24.02.2021**



வணிகவியல் துறை மாணவியின் கைவினை ஓவியம்

# DEPARTMENT OF COMPUTER SCIENCE

(2018 – 2021)



## COMPUTER SCIENCE LAB



# DEPARTMENT OF CHEMISTRY



**வேதியியல் துறை மன்ற விழா** (11.02.2021)





2021–ஆம் கல்வியாண்டில் ஜனவரி 07.01.2021 அன்று வேதியியல் ஆய்வகம் நமது கல்லூரியில் முதல்வர் தலைமையில் திறப்புவிழா நடத்தப்பட்டு இனிதே செயல்படத் தொடங்கியது

# DEPARTMENT OF SOCIAL WORK

## ASSOCIATION MEETING
## (05.02.2021)





Dr. Kumar, Assistant Lecturer, Periyar Govt. Arts College, Cuddalore delivered special speech about the personality developent to the Social work students. He also explained about the value of relationships, honest, communication skill etc.

Our Principal and Resource Person disributed the certificates to the students those who scored high marks in semester wise and subject wise.

# DEPARTMENT OF ECONOMICS



## பொருளியல் மன்றக் கூட்டம்

2021–2021 பிப்ரவரி 12 அன்று இளங்கலை பொருளியல் மன்ற கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கல்லூரி முதல்வர் முனைவர் து.கணேசன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். முனைவர். விஜயன், இணை பேராசிரியர் (ஓய்வு), அறிஞர் அண்ணா அரசு கலை(ம)அறிவியல் கல்லூரி, விழுப்புரம் அவர்கள் சிறப்புரையாற்றினார். மூன்றாம் பருவத்தேர்வில் பாடவாரியாக முதலிடம் பெற்ற மாணவிகளுக்கும், பாடவாரியாக முதலிடம் பெற்ற மாணவிகளுக்கும் முதல், இரண்டு (ம) மூன்றாம் பருவப் பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவிகளுக்கும் இவ்விழாவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.



2020–2021 ஜனவரி 12 அன்று பொருளியல் துறை சார்பில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு பொருளியல் மாணவிகள், கல்லூரி முதல்வர் மற்றும் பொருளியல்துறை பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

# DEPARTMENT OF STATISTICS



# DEPARTMENT OF HISTORY



**II YEAR**

(2019-2022)



# கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள்

| பட்டப்படிப்புகள் MAJOR | கற்றல் வழி MEDIUM |
|---|---|
| 1. B.A., தமிழ் | தமிழ் |
| 2. B.A., English | English |
| 3. B.Com., | English |
| 4. B.Sc., Maths | English |
| 5. B.Sc, Computer Science | English |
| 6. B.Sc, Physics | English |
| 7. B.Sc, Chemistry | English |
| 8. B.Sc., Stastics | English |
| 9. B.S.W., (Social Work) | English |
| 10. B.A., History | English |
| 11. B.A., Economics | English |

## கல்லூரியில் செயல்படுத்தப்படும் குழுக்கள் / சங்கங்கள்

1. மாணவியர் நலக்குழு
2. விளையாட்டுக் குழு
3. பணி மகளிர் மற்றும் மாணவியர் குறை தீர்க்கும் குழு
4. நாட்டு நலப்பணித் திட்டம்
5. கேலிவதை தடுப்புக்குழு
6. முன்னாள் மாணவியர் குழு
7. கல்லூரி ஆண்டு மலர் குழு
8. மாணவியர் கையேடு குழு
9. வேலை வாய்ப்பு செய்திக் குழு
10. மென்திறன் பயிற்சிக்குழு
11. கட்டிடக் குழு
12. இளம் செஞ்சிலுவை சங்கம் (YRC)
13. செஞ்சுருள் சங்கம் (RRC)
14. பெற்றோர் ஆசிரியர் சங்கம் (PTA)

# தமிழ்த்துறை

## செந்தமிழே!

செந்தமிழே! நறுந்தேனே!!
கருமுகிலே! நெடுங்கடலே!!
வளர்பிறையே! முழுநிலவே!!
நின்னை என்னென்று புகழ்வேனோ!
செயலற்று நிற்கின்றேன்...
எனினும் என்னுள் தங்கிய
இறைவனாவாய்
நின்தாள் பணிகின்றேன்.

- முனைவர் **ரா.ரேவதி,**
உதவிப் பேராசிரியர் மற்றும்
துறைத்தலைவர், தமிழ்த்துறை.

## மனமே ஏற்றம் கொள்!

வலிகள் தாங்கும் மனமே!
கவலை கொள்ளாதே
வலிகள் அல்ல-அவை
உன்னை செதுக்கும்
உளிகள் என்றுகொள்
ஏற்றம் பெறுவாய்



- முனைவர் **த.இளவரசி,**
M.A.,M.Phil.,B.Ed.,NET.,Ph.d.,
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை.

## தமிழ்

காதலித்துப்பார்
தமிழைக் காதலித்துப்பார்!
உடலில் சக்தி பிறக்கும்!
உள்ளத்தில் ஒழுங்கு மேம்படும்
உவகையில் உற்சாகம் ஊற்றெடுக்கும்
மனதில் மனிதம் நிலைக்கும்
மனிதத்தின் மகத்துவம் விளங்கும்!



- **நெ.நாகேஸ்வரி,**
M.A.,B.Ed.,TET.,M.A.,(Yoga)M.Phil.,NET.,SET.,Ph.d.,
தமிழ்த்துறை.

## தனித்துவம்

தனிமை
உன் வாழ்க்கைப் பயிரை
வளமாக்கும் உரம்...
உன்னை நேசிக்க...
உன்னை வாசிக்க...
உன்னை வலுப்படுத்த...
உன்னை நெறிப்படுத்த...
கிடைத்த அரிய தருணம்...
கடக்க முடியாத இன்னல்களையும்
கடத்திவிடும் தனிமையை நேசி...
தனித்துவத்தைத் தேடி
நீ ஓடவேண்டியதில்லை
நிற்பாய்..
நீயே தனித்துவமாய்...



- **மா.சுப்பலட்சுமி,**
M.A.,M.Ed.,SET., NET., Phd.,
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை.

## தாய்மொழி

அழகு தமிழ், அன்புத் தமிழ்
பழகு தமிழ், பண்புத் தமிழ்
இளமை குன்றாது இருக்குந் தமிழ்
வளமை மாறாது வாழுந் தமிழ்
எளிமை மிக்க இன்பத் தமிழ்
தெளிந்த நீர்போல் செல்லும் தமிழ்
வள்ளல் தமிழ், முதுமைத் தமிழ்
கள்ள மில்லா பிள்ளைத் தமிழ்
அல்லல் வரினும் ஆற்றும் தமிழ்
வெல்க தமிழ். வாழ்க தமிழ்.



- **ரா.சிவசங்கரி,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு.

# தந்தை

எந்தையே!

நான் தேடிப்பார்க்கவில்லை...
நீ என்னுள் கலந்துள்ளாய் என்பதால்...
நான் உணர்கிறேன்..
என் கண்ணீர்த் துளியைத் துடைக்கும்
உமது வருடலில்
நான் கடக்கிறேன்...
என் துன்பங்களை
உம் கரம் கோர்த்த கதகதப்பில்
நான் வசிக்கிறேன்...
என்றென்றும் உமது இதயத்தில்
நினைவுகளில் செல்ல மகளாய்...



- **நா.கனிமொழி,** M.A.,M.Phil.,B.Ed.,Ph.D.,
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை.

# அன்னை

அன்பினால் வரைந்த ஓவியம் போல
எனக்கொரு ஓவியமாய் நீ கிடைத்தாய்!
இத்தனை காலமும் கடந்த பின்னும்
எனைத் தாங்கி நீயும் நிற்கின்றாய்...
என்னிடம் எதையும் எதிர்ப்பார்த்து
இதுநாள் வரையிலும் வாழ்ந்ததில்லை
வளர்ந்தால் போதும் பார்த்தால் போதும்
எனை ரசிக்கும் கண்ணாடியாய் நின்றாய்–நீ
உனக்குள் ஆயிரம் வலிகள் இருந்தும்
எதையும் என்னிடம் காட்டியதில்லை
உன்பசி மறந்து என்பசி அறியும்
தானே இயங்கும் இயந்திரம் நீ
எனக்கொரு நிமிடம் உனக்கொரு ஜென்மம்
காத்து பார்த்து எனை வளர்த்தாய்
உன் பிள்ளை ஊனமாய் இருந்த போதும்
உன் நெஞ்சில் ஓர் ஊனமும் தெரிந்ததில்லை
நான் ஏழு பிறவிகள் எடுத்தால் கூட
எனக்காய் நீயும் வாழ்வாயே!
எழுத்து வடிவம் எழுதா கவிதை
என் உயிரில் நீயே இருக்கின்றாய்...



- **மு.இராஜலட்சுமி,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு.

# கல்வி

கல்வி என்பது காகிதம் அல்ல
வானில் பறப்பதற்கு
காற்று அடித்தாலும் அசையாமல் நிற்கும்
கல் அல்லவா அது
கல்வி கற்பது வலியா?
உன்தாய் ஈன்றெடுத்து பெற்ற வலியை
விடவா பெரிது அது...
புரிதலுடனும் விருப்பத்துடனும்
கற்கும்போது எதுவும் எளிதே
கல்வியைப் பெறுவது மட்டும் உன் கடமை அல்ல
அதில் நீ காணும் அனுபவங்களே உன் உடமை
காதலினால் நீ அடைவாய் வேதனை
கல்வியால் நீ பெறுவாய் சாதனை!
சாதனை பெறுவதே நம் கடமை...!



- **சு.ரசிகா,**
இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு.

# அன்னை

அழகின் அம்சமாய் உள்ள தாயே...
அறிவும் திறனும் பெற்று
சிறு பிள்ளையைத்
தழைத்து ஓங்கச் செய்பவளே!
அமுதின் அழகாய் தன் பிள்ளையைப்
பார்த்து மகிழ்பவளே...
தன் பிள்ளை தவறொன்று செய்யின்
கண்டிப்பவளே...
குடும்பத்தில் கஷ்டம் வந்தாலும்
சோதனை வந்தாலும்
எதையும் துணிந்து எதிர் நோக்குபவளே...
கடலில் அலை அடித்து
ஓய்ந்தாலும் ஓயும்..
ஒரு தாயின் பாசம்
என்றும் ஓய்வதில்லை...
நான் வெற்றியோடு
வந்தாலும் தோல்வியோடு
வந்தாலும் புன் சிரிப்போடு
வரவேற்பவள் தாயே!



- **கே.சுபா**
இளங்கலைத் தமிழ், இரண்டாம் ஆண்டு.

# நம்பிக்கை!

**ஒ**ரு அறையில் மூன்று மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன. அப்போது ஒரு அறையின் உள்ளே மெல்லமாக காற்று வீசியது. அங்கிருந்த மூன்று மெழுகுவர்த்தியில் முதல் மெழுகுவர்த்தியான **அன்பு** நினைத்தது காற்று வீசினால் நாம் அணைந்துவிடுவோமா என்று நினைத்தது. மீண்டும் காற்று வீசியது, அப்போது அன்பு என்ற மெழுகுவர்த்தி அணைந்தது. அதற்கடுத்து மீண்டும் ஒருமுறை காற்று வீசுவது போல் இருந்தது. அங்கிருந்து இரண்டாவது மெழுகுவர்த்தியான **அமைதி** நினைத்தது நான் அணைந்து விடுவேன் என்று. அப்போது மீண்டும் காற்று வீசியது. துரதிஷ்டவசமாக அமைதி என்ற மெழுகுவர்த்தியும் அணைந்தது. அந்த மூன்றாவது மெழுகுவர்த்தி மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

அதே நேரத்தில் மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்த அந்த அறையினுள் ஒரு சிறுவன் வந்தான். அவன் கொஞ்சம் மனவருத்தத்துடன் அந்த இரண்டு மெழுகுவர்த்திகள் அணைந்ததை நினைத்து வருந்தினான்.

அப்போது மூன்றாவதாக எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தி சொல்கிறது, அதான் நான் இருக்கிறேனே, அப்புறம் என்ன? என்னை வைத்து அணைந்த அன்பு, அமைதி என்ற இரண்டு மெழுகுவர்த்திகளையும் ஏற்றுக்கொள் என்றது.

அந்த மூன்றாவது மெழுகுவர்த்தி தான், **நம்பிக்கை.**



**– வீ.அஸ்வினி,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு.

# அன்னை

**அ**ன்பாய் மட்டும் பார்க்கும் **அ**ற்புதத் தாயே
**ஆ**சை வார்த்தைகளைச் சொல்லும் **ஆ**னந்தமே
**இ**ன்றும் என்னை வெறுக்காத **இ**னியவளே
**ஈ**ரேழு ஜென்மம் கொண்டாலும் நீயே
என்னை **ஈ**ன்றெடுப்பாயாக
**உ**ன்னைப் போன்ற **உ**ன்னதப் பெண் உண்டோ
**ஊ**ரே தூற்றினாலும் உன் **ஊ**க்கம் ஒன்றே போதும்
**எ**ன்றும் உடன் வருவாய் என் **எ**ழில் மிகுந்தவளே
**ஏ**ற்றுவாயாக என்னை வாழ்க்கை என்னும்
**ஏ**ணியிலே
**ஐ**சுவரியமாய் நீ வந்தால் **ஐ**சுவரியமே...
**ஒ**ருவரும் உனக்கு **ஒ**ப்பில்லை அம்மா
**ஓ**ய்வில்லாமல் **ஓ**டிக் கொண்டிருப்பாயே!
**ஔ**டதமே என் வலிகளுக்கு **ஔ**டதமே!
**தே**னாய் இனிக்கும் என் **தே**ன்மொழியே
**வி**யக்க வைக்கும் **வி**ந்தையே
**தே**டிப் பார்த்தாலும் கிடைக்காதவளே
**வி**ரைந்து வந்து அணைத்துக் கொள்
என் தாய் **தேவி**யே
உமக்கு நான் தலை வணங்குகிறேன்



**– ஏ.அகிலா,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு.

(ஔடதம் – மருந்து
தாய் – "தேவி" என் அம்மா)

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

**முன்னுரை**

தமிழன் பரந்த எண்ணமும் நோக்கமும் கொண்டவனாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தான் என்பதற்கு புறநானூற்றில் இடம்பெற்ற கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வரிகளே சான்றாகும். தமிழ் இலக்கிய் பூங்காவில் தோன்றி உலகெங்கும் மணம் வீசும் அழகிய மலராக இவ்வரி விளங்குவதை இக்கட்டுரையில் காண்போம்.

**யாதும் ஊரே**

யாதும் ஊரே என்ற எண்ணம் யாருக்கு தோன்றும். கற்றவருக்குதான் தோன்றும். ஏனெனில் கற்றவரைத்தான் எந்த ஒருநாடும் வருக! என வரவேற்கும்.

**கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு**

நன்கு கற்ற கல்வியாளராக இருந்தால்தான் யாதும் ஊரே என்ற எண்ணம் உருவாகும்.

**வள்ளுவர் உள்ளம்**

கற்றவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடு எல்லா ஊரும் சொந்த ஊர் என்பது தெரிந்தும் கல்லாமல் காலம் கழிப்பது ஏன் என வள்ளுவர்

"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு".

என உணர்த்துகிறார்.

**முடிவுரை**

யாதும் ஊரே! யாவரும் கேளிர் என்ற எண்ணம் அனைவருடைய மனதிலும் உருவாக வேண்டும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக கண்டோம்.

**– து.நாகலட்சுமி**
இளங்கலைத் தமிழ்,
மூன்றாம் ஆண்டு.



# தமிழ் மொழியின் சிறப்பு

**முன்னுரை:**

தமிழை அமுதமாக பல்வேறு புலவர்கள், கவிஞர்கள் கூறினாலும் ஆங்கிலம் என்பது நம்முடைய சந்திப்பு மொழியாகிவிட்டது. இதில் நாம் குறைக்கூறத் தேவையில்லை. ஆனால் இறைக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக அக்கால சித்தர்களும் இக்கால ஆன்மீகவாதிகளும் கருதுகின்றனர்.

**இறைக்கும், தமிழுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு**

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"

இந்த பாடலின் மூலம் இறைக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு வெளிப்படுகிறது.

**தமிழ் மொழியின் சிறப்பு:**

உலக மொழிகளுள் மூத்ததும் முன்னோடியுமான மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்றால் அது மிகையாகாது. உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 3000 லிருந்து 8000 வரை இருக்கும் என்று மொழியியலாளர்கள் கூறுகிறார்கள்.

**தமிழின் தொன்மை**

இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்து சீரும் சிறப்போடும் வாழ்ந்துகொண்டிருக்கிறது தமிழ் மொழி. தமிழ் மொழி தொன்மை, முன்மை, செம்மை, வளமை, இனிமை, தனிமை, பெருமை, திருமை என பலவகை சிறப்புகளை ஒருங்கேயுடையது என்கிறார் ஞா.தேவநேயப் பாவாணர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" – பாரதி

"தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத் தமிழ்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

– பாரதிதாசன்

அடுத்து, தமிழ்மொழியின் சிறப்பை எடுத்துரைப்பதற்கு எண்ணற்ற சங்க இலக்கிய நூல்கள் இருந்தாலும் அவற்றில் திருக்குறள் ஒன்று மட்டுமே போதுமானது.

**முடிவுரை:**

இது ஒன்று போதாதா தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துரைப்பதற்கு.

**- த.அவந்திகா,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு



# பெண் கல்வி

**ஊ**துகுழலைக் கையில் எடுத்த பெண்ணே!
இனி எழுதுகோலை கையில் எடு கண்ணே!
பந்தத்தை நீக்கிவிடு பெண்ணே!
நம் பாரதத்தைப் போற்றிடு கண்ணே!
ஓடுகளைத் தயாரிக்கும் பெண்ணே!
இனிமேல் கையில் சுவடுகள் எடு கண்ணே!
அரிவாளால் மரம் வெட்டும் பெண்ணே!
இனி அறிவால் வெல்ல வாய்ப்புகள் கண்ணே!
பெண்கள் அடிமைகள் என சொன்னது யார் பெண்ணே!
அடிமையை அகற்றி பெருமையைத் தேடு கண்ணே!
குடும்பத்தை யோசிக்கும் பெண்ணே இனி
வெளி உலகம் காண்போம் முன்பே!
குழந்தைகள் பெற்றிடும் அடிமைகள் அல்ல!
புதுமைப் பெண்களாக மாறிடும் காலங்கள் சிலவே!
புதுமைப் பெண்களாக எழுவோமே!
பெண்கள் நாட்டின் கண்கள் - இனி
பெண்மையைப் போற்றிடுவீர் ஆண்களே!



**- நா.சௌமியா,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு

# அன்னை!

**அ**ன்னையே!
உலகை உருவாக்குவது
உன்
ஒருசாண்... வயிறே..!!
உன் வயிறு
ஒட்டிப் போனாலும்
என் வயிறைக் குளிர வைப்பாய்!
நீ,
உலகை உருவாக்குபவன்
என்பதால் நீயே
பிரபஞ்சம்!
உன் உயிரைக்
கொடுத்து
எனக்கு உடல் கொடுத்தாய்
உன் ஆசைகளையும்
அடக்கிக்கொண்டு
நான் ஆசை வைத்த அனைத்தையும்
வாங்கித் தந்தவள் நீயே...!

**- ரா.விசாலாட்சி,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு





**- D.தனவந்தினி,**
இளங்கலைத் தமிழ்,
முதலாம் ஆண்டு







– **ஏ.பிரியா,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாம் ஆண்டு.





– **M.சுபிதா,**
இளங்கலைத் தமிழ்,
மூன்றாமாண்டு.

## தமிழ்த்துறை கருத்தரங்கம்







தமிழ்த்துறை மாணவியர்களின் கைவினைத்திறன்

# வைராக்கியம்

ஒரு கிராமத்தில் ஏழைத் தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். திருமணம் முடிந்தும் அவர்களுக்கு குழந்தை இல்லை. சில வருடங்கள் கழிந்தன. இருவரும் வாழ்க்கை வெறுத்து கடும் மன உளைச்சலுக்கே ஆளாயினர்.

ஒரு நாள் ஒரு முடிவு செய்தனர். கடைசி காலத்தில் கொள்ளி போடுவதற்காகவாவது ஒரு பிள்ளை வேண்டும். நாம் எந்த ஜென்மத்தில் செய்த பாவமோ இந்த ஜென்மத்தில் அனுபவிக்கிறோம். இனியும் என்னால் முடியாது நான் என் உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிறேன் என ஒரு குளத்தை நோக்கி ஓடினாள்.

திடீரென குளத்தில் இருந்து நீதி தேவதை தோன்றினாள். நீ இந்தக் குளத்தில் குதிக்காதே உன் கவலை தீர நான் ஒன்று சொல்கிறேன் கேட்பாயா? என்று நீதி தேவதை கேட்டது. அதற்கு அவள் உன்னால் எனக்கு பிள்ளைவரம் தரமுடியுமா? என் கவலையை உன்னால் தீர்க்க முடியாது. என்னை சாகவிடு என்றாள்.

நான் உனக்கு பிள்ளைவரம் அளிக்கிறேன். ஆனால் ஒன்று அக்குழந்தையால் நடக்க இயலாது. அவளது வேலையை அவளால் செய்ய முடியாது. பிறரது உதவி நிச்சயம் வேண்டும். இதற்கு சம்மதம் எனில் நான் வரம் அளிக்கிறேன்.


எனக்கென்று ஒரு பிள்ளை வேண்டும் அது எப்படி இருந்தாலும் சரி என்றாள். நீதி தேவதையும் வரம் அளித்தது. அவள் குழப்பத்தோடு வீட்டுக்கு செல்கிறாள். அவளது கணவன் எங்கேச் சென்றாய்? என்னவாயிற்று? என்று வினவினான். அவள் நடந்தவற்றையெல்லாம் கூறினாள். உடனே மயங்கி விழுகிறாள். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறான். கரு உண்டாகி உள்ளது என மருத்துவர் கூறினார். இருவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு அக்குழந்தையைப் பெற்றெடுத்தனர்.

குழந்தை பிறந்த பின்பு அனைவரும் ஊனமுற்ற குழந்தைகள் எனக் கேலிச் செய்தனர். அவள் வளர்ந்த பிறகும் சிலர் அவளை கேலிச் செய்தனர். இது அவள் செவிகளுக்கே எட்டியது. அப்போது அவள் ஒரு வைராக்கியம் கொள்கிறாள்.

அவள் கொண்ட வைராக்கியம் இந்த ஊர் மிஞ்சும் அளவிற்கு நான் வர வேண்டும் என எண்ணி பள்ளியில் சேர விரும்பினாள். படிக்கவும் தொடங்கினாள். பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்துவிட்டாள். அவளது பெற்றோர், இத்தோடு போதும் எங்களுக்கும் வயதாகிவிட்டது. எங்களுடனே வீட்டில் இரு என்றனர். இல்லை நான் கல்லூரி கட்டாயம் சென்றாக வேண்டும் என்றாள். கடைசியாக, அவளது பெற்றோரும் ஒப்புக் கொண்டனர்.

அவள் கல்லூரிக்குச் சென்ற முதல் நாள் ஒரு ஆசிரியர் கேட்கிறார். உன் ஆசை என்ன? நான் படிக்க வேண்டும். ஆசிரியர் ஆனந்தத்தோடு அவளை கட்டி அணைத்தார். அவளைத் தினமும் அவளது பெற்றோர் தூக்கிக்கொண்டு வந்துதான் வகுப்பறையில் அமரவைப்பர்.

அவள் படித்து முடித்து வாழ்க்கையின் உச்சத்தை அடைகிறாள். தற்போது அவள் நடக்க இயலாதவர்க்கு சக்கர நாற்காலி தயாரிக்கும் நிறுவனம் நடத்தி வருகிறாள். அவளை ஏளனம் செய்தவர்களே இன்று அவள் நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். அவள் தரும் கூலியில்...



– **க.இனிதா,**
இளங்கலைத் தமிழ்,
முதலாம் ஆண்டு.

# "யாதும் ஊரே; யாவரும் கேளிர்;"

முன்னுரை : யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் கணியன் பூங்குன்றனார் இயற்றிய புறநானூற்று செய்தியை இனி இக்கட்டுரையில் காண்போம்.

**கணியன் பூங்குன்றனார்:**

பூங்குன்றனார் இயற்றிய புறநானூற்றுப் பாடல் பழங்கால தமிழர்களின் பண்பாட்டை விளக்குகிறது.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே"

எல்லா ஊரும் எம் ஊர், எல்லா மக்களும் உம் உறவினரே என்ற எண்ணம் எல்லார் மனதிலும் இருக்க வேண்டும். நன்மை தீமை அடுத்தவரால் வருவதில்லை. துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை. பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பும் நிச்சயம் இருக்கும். அதனால் இறப்பது புதுமையில்லை.

**சுவாமி விவேகானந்தர்:**

"யார் உழைப்பால் நாம் வாழ்கின்றோமோ அந்த மக்களின் துயரங்கள் நம்மை அலைக்கழித்து நமது நாடி நரம்புகளில் எல்லாம் கலந்து நம்மை தூங்க விடாமல் செய்கின்றதோ, அதுவே நாட்டுப்பற்றின் ஆரம்பம்" என்று விவேகானந்தர் கூறுகிறார்.

**மனிதனை நேசி:**

மனிதன் என்பவன் தனிமரமல்ல. அவன் தானாய் உருவாகவில்லை. சமூகத்தினால் மனிதனாய் உருவாக்கப்படுகிறான். உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வாழும் இடம், இவையெல்லாம் நமக்கு முன்னே இருந்தவர்கள் சிந்திய வியர்வைத் துளிகளாய்க் கிடந்தவை. அவர்களுக்கு நாம் வெண்சாமரம் வீச வேண்டும் என்பதில்லை. இயந்திர உலகில் ஓடுகின்ற ஓட்டத்தில் ஒருதுளி நேரத்திலாவது உழைத்தவர்களை நம் நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

**நற்றினை**

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

நட்பு கொண்டவர்கள் எதிரே இருந்து கொண்டு நஞ்சை ஊற்றி உண்க எனத் தந்ததும், சிறிதும் மனங்கோணாமல், முகத்தை சுளிக்காமல் உண்பர் நனிநாகரிகம் ஆனால் இப்போது இவ்வுலகம் இவ்வாறு உள்ளதா? என கேள்வி எழுப்பினால். நிச்சயமாக இவ்வாறு இல்லை என்பதே என்னுடைய பதிலாகும்.

**வள்ளுவர்**

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

மேற்கூறப்பட்ட கருத்தையே வள்ளுவர் கூறுகிறார்.

**மனிதம் செய்வோம்**

மனிதராய் பிறந்த நாம், நம் சக மனிதருக்கு உதவுவது எப்படி? மனிதரை மனிதராய் மதிக்கும் பண்பை முதலில் நாம் கற்று கொள்ள வேண்டும். பணம் என்ற காகிகத்தில் பற்று கொண்டு, எளியவரை எள்ளி நகையாடுவதும், உழைக்கும் வர்க்கத்தை கண்டால் ஒதுங்கிப் போவதும், மனிதம் மறைந்து போகின்ற செயல்களாகும். பொதுநலம் போற்றும் மானுட சமுத்திரம் மிகப்பெரியது.

**இக்கால வாழ்க்கை**

ஒருவன் அடிகுழாயில் நீரைஊற்றி வரவில்லை எனில் தாகத்தைத் தவிர்க்க தண்ணீர் ஊற்று அடித்துக் குடிக்கிறான். மீண்டும் அதை நிரப்பி வைத்தால் பின்வருவோர் குடிப்பார்கள் என எண்ணாமல் அப்பாத்திரத்தை தண்ணீரால் நிரப்பாமல் சென்றுவிடுகிறான். இப்போது இவ்வுலகம் இவ்வாறு இருக்கிறது.

**அர்ப்பணிப்பே அறம்:**

மனநிறைவோடு வேலை செய்ய வேண்டும். மனநிறைவின்றி செய்யும் வேலை குறைவின்றி முடியும். தனிமனித உழைப்பு இச்சமூகத்திற்குத் தேவை. இதை ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்ய வேண்டும். அப்படி அர்ப்பணித்தவர்கள் மட்டுமே, இங்கே தங்களுடைய தடத்தைப் பதிய வைத்து சென்றிருக்கின்றார்கள். அதனால் இன்னும் நம்முடைய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களை நம் நெஞ்சத்தில் சுமந்து கொண்டிருக்கிறோம்.

**மானுட சமுத்திரம் நானென்று கூவு**


என்பது பாரதிதாசனின் வரிகளாகும். சமூகத்துடனான மனிதனுடைய உறவு பலப்பட

பாலமாய் அமைவது அன்பு மட்டுமே. அதற்கு ஒவ்வொரு மனிதும் மானுட சமுத்திரத்தில் ஐக்கியமாவதால் மட்டுமே இது சாத்தியம்.

சமமாக மதித்தல்

"மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

மாண்புமிகு பெரியோரைக் கண்டு வியக்கவோ அல்லது சிறியோராகச் செயல்படுபவரைக் கண்டு இகழதலோ இல்லவே இல்லை. சிலர் நீர்வழிச் செல்லும் தெப்பம் போல புகழையும் செல்வத்தையும் பெற்று வாழ்ந்து மறைவர். பலர் எத்தகைய சிறப்பையும் பெறாமல் வாழ்ந்து மறைவர்.



- **மு.இந்துமதி,**
இளங்கலைத் தமிழ்,
மூன்றாமாண்டு

# சாதனைப் பெண்கள்

**முன்னுரை:**

இந்தியாவின் 70-வது குடியரசு தினவிழாவையொட்டி அணிவகுப்புகளில் பெண் வீரர்களின் பங்களிப்பு சாகசங்கள் ஆண் வீரர்களுக்கு சற்றும் குறையாமல் இருந்தது. இந்திய வரலாற்றில் ஒருபோதும் ஆண் வீரர்களின் அணிவகுப்புகளுக்குப் பெண் அதிகாரிகள் தலைமை தாங்கியதில்லை.

ஆனால், இந்த ஆண்டு லெப்டினனட் பாவனா கஸ்தூரி, ஆண் வீரர்களின் அணிவகுப்பைத் தலைமைத் தாங்கினார்.

**எண்ணமும் சொல்லும்**

இந்தச் சமுதாயத்தில் ஒரு பெண் ஒழுக்கமான பெண்ணாக இருந்தாலும், மருத்துவராக இருந்தாலும் அரசியல்வாதியாக இருந்தாலும் இவர்கள் நிறத்தையும் உருவத்தையும் வைத்து கேலி செய்கிறார்கள். சிவப்பாக இருந்தால் மட்டும் தான் அனைத்துத் துறையிலும் இருக்க முடியும் என்ற எண்ணம் இந்தச் சமுதாயத்தில் ஒரு கூற்றாகவே இருந்து வருகிறது. எதுவாக இருந்தாலும் நாம் சொல்லுகின்ற சொல்லும் எண்ணமும் சரியாக இருக்க வேண்டும். அடிப்படையில் பெண்களை மதிக்காத இயல்பு கொண்டவர்களால்தான் அப்படி நினைக்க முடியும்.

**சாதித்த பெண்கள்:**

பெண்கள் இந்நாளில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து வருகின்றனர். சாதனைப் பெண்களில் உலகையே தமிழ்நாட்டின் பக்கம் திரும்பி பார்க்க வைத்தவர் தான் நம் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள். இதேபோல் மேரி கோம், பி.வி.சிந்து, சானியா மிர்சா எனப் பலர் பல்வேறு துறைகளில் பெண்கள் சாதித்துள்ளனர். அறிவியல் துறையில் எட்ட சாத்தியமில்லாததாக கருதப்பட்ட உச்சத்தையும் பெண்கள் எட்டியுள்ளனர். நோபல் பரிசு முதல் நாசாவிற்கு செல்வது வரையிலும் பெண்கள் வளர்ந்துள்ளனர்.

**முடிவுரை:**

பெண்களால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை. பெண்கள் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்ய இயலும். ஆண்களைச் சாராமல் பெண்களால் வாழ இயலும் என்பதை நிரூபித்துவிட்டார்கள்.

அவள் இன்றி ஓர் அணுவும் அசையாது இவ்வுலகில் விழித்தெழு! சாதனை படைபெண்ணே!



- **ச.பிரித்தி,**
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு.

# DEPARTMENT OF ENGLISH

## The Phase of a Woman

I have hurt feeling!
But I have broken hearts by accident.
I have loved uncoditionally!
But I have cried uncontrollably.
I have stood for something!
But left for nothing
I have been a back bone!
But broken into pieces
I have been loyal
But rewarded with betrayal.
I have been a child of God!
But never a woman of his word.
I'm woman lost and longing to be found.



**P.Kavitha**
III - B.A, English

## Quotes

Life...

i) Our expectations are questions?
His decisions are answers..

ii) Our plans are temporary
His words are

iii) Light has lots of Hidden darkness...
Dark has lots of brightful things.

## Success

Sow the seeds in your hearts,
Irrigate it with your ideas
Stimulate it by your motivation
Harvest your own success.



**-E.Sakthi Priya**
III - B.A, English

## Feel Blue...

I searched the boundary line for my euphoria,
When I saw the two line.
My eyes were filled with tears;
An I was in the stage of ecstasy.
With this bliss, I ordered my days
To go quickly,
I titled my head for a second
And stare at my belly, that
When would it become complete?
I was glad that my feminity would soon be complete,
Suddenly, some pain hits my abdomen;
It came to stipulate that my happiness are
Dissolving in my womb,
My heart shattered, body shivered; the
Screaming of my soul reached as long as the sky.
The days which I longed for has started.
To devour me,
My consciousness also dissolved with it.
When my uterus was full, my heart was free; Now
My heart is too heavy with pain and my womb become empty.

**N.Nandhini**
III - B.A, English



# Nature

*It was a pleasant morning...*
*The darkness gone, earth full of*
*golden rays of sun*
*The brightness of sun, leaves are*
*glowing greeny*
*The wind blows gently*

*Fragrance of Jasmine and rose*
*blows in our home*
*Black beetle absorbing honey, a*
*beautiful scenary*
*In the sky, birds flying searching*
*food, a beautiful scenary*
*Dancing of peacocks, fighting of*
*puppies*

*Squirrels eating fruit and jumping*
*from tree to tree*
*Montains were silent*
*See are violent*
*Lapping of river water is pleasure to*
*my heart*
*Children were playing*
*Above all, I admire Nature!*



**-P.Merlin**
III - B.A, English






**V.Yogasri**
III - B.A, English

**SAVE NATURE WATER, CONSERVE IT FOR BETTER FUTURE**





**- B.Shalini**
III - B.A, English



*"Brevity is the Soul of Wit"*

*- Willam Shakespeare*



**-A.Venkatalakshmi**
III - B.A, English



*"Religion is behaviour and not mere belief"*

*- Sarvapalli Radhakrishnan*



**J.Slyiya Ancy**
III - B.A, English



**SAVE NATURE SAVE WORLD**



**-G.Kowsalya**
III - B.A, English

# Dreams are Immortal

The long sky is yours, so dream to fly high
Your delightful dreams are never going to die

You deserve to dream, so dream happily
your dreams will make your life wonderful

Presently, your skills may be in darkness
But one day your dreams will reveal it as greatness


When you dream, you will fell yourself as powerful
Because your dreams are the reason to feel joyful

Drems are the healing medicines to your failures
Your dreams will determine that who you are

Your dreams will decorate your life beautifully
If you work hard for it, your life will be effective.

The word 'Dream' will do magic in you
Definitely, One day your dream will come true.

Dream blissfully
Live hopefully
It makes your life colourfully



**-K.Anitha**
III - B.A, English

**"Take care of the Trees,
They will take care of You.."**





**-M.Vigneshwari**
III - B.A, English

# *My Best Friend*

The Story explains that two friends were talking through the desert. During some point of the journey they had an argument, and one friend slapped the other one in the face. The one who got slapped was hurt, but without saying anything, wrote in the sand;

"Today my best friend
Slapped me in the face."

They kept on walking until they found an oasis where they decided to take a bath. The one who had been slapped got stuck in the mire and started drowning. But the friend saved him. After the recovered from the wreck, he wrote on a stone;

"Today my best friend
Saved my life."

The friend who had slapped and saved his friend asked him;

"After I hurt you, you
Wrote in the stand
And now you write

On a stone, why?

The other friend replied; "when someone hurts us we should write it down in sand where winds of forgiveness can erase it away. But, when someone does something good for us, we must engrave it in stone where no wind can ever erase it."

Moral: "Don't value the things you have in your life, But value who you have in your life."

"Don't judge by mind, judge from your heart"

**- J.Rajeswari**
III - B.A, English



# டாக்டர் அப்துல்கலாம்

அய்யா! எங்களின்
மூத்த குடிமகனே
இந்தியத் தாயின் தலைமகனே!
எங்களை
கனவுகாணச் சொல்லிவிட்டு
காவியமாய் கலந்தவரே! உம்மை
எப்படி அழைப்பது?
கவிஞரே! எழுத்தாளரே!
விஞ்ஞானியே!
தத்துவப் பேராசிரியரே!
இயற்கையின் இலக்கணமே!
எளிமையின் அடையாளமே!
என்றெல்லாம் அழைத்திட்டாலும்.
ஏதோ ஒருவகையில் நீ
வார்த்தைகளுக்கு அடங்கமாட்டாய்!
இந்தியாவை நேசித்த வங்கக்கடலே!
இராமநாதபுரத்தின் உயர்ந்த கோபுரமே!
அலையில்லா கடலே!
அமைதியின் புன்சிரிப்பே!
உந்தன் தொலைநோக்குப் பார்வைக்கு
வல்லரசு இந்தியா உம்மை
வாஞ்சையோடு நன்றி சொல்லும்!
தமிழ் மண்ணையும் தாய் நாட்டையும்
நேசித்த
ஏவுகணை நாயகனே!
நன்றி மறவாத நல்லாசிரியரே!
காலங்கள் பல கடந்தாயினும்
உம்மை எப்படி மறப்போம்.

**- தி.ப.யோகேஷ்வரி**
இளங்கலை ஆங்கிலம்,
மூன்றாம் ஆண்டு



# *For You!*

Oh! Yeah, I am loving you, it seems
You know? You deserve more happiness.
Are you thinking about you from anyone's eyes?
Is that really matter?

Does anyone know you better than us?
I think no. Of course,
Oh yes, you're taking good care of us,
It's good to be yours, than anyone else.

But why are you so forgetful to take care of you?
You've walked the long way,
There are millions given by you,
Just to keep us happy all the way.

There is always something you didn't say,
Yeah! The hardships, the struggles, and so on,
We are grownup fearlessly, not fiercely,
Why are you growing old? This soon.

Hold on for sometime, just a little more.
I will take care of you, for the rest, Dad.
I will make you take rest,
without the fear about the future of us,
Just hold a little more, Mom.




- V.Deepika
III - B.A, English







**- J. AdhiLakshmi**
III - B.A, English






**-D.S.Prabavathi**
III - B.A, English






**-S.Easwari**
III - B.A, English

# DEPARTMENT OF COMPUTER SCIENCE

## நூலகம்

மனிதன் தன்னைத் தானே
செதுக்க உதவும்
சிற்பக் கூடம்..

பள்ளிப் படிப்பை
பாதியில் விட்டோருக்கு
மீதிப்படிப்பை சொல்லித்தரும்
பள்ளிக்கூடம்!

கால வெள்ளத்தில்
கடந்து போன வரலாற்றை
நம் கண்முன்னே
புதுவெள்ளமாய் பாய்ச்சும்
வற்றாத ஆறு

ஓய்வு நேரத்தில்
ஓயாத அலையாய் மாற
கற்றுத் தரும் அறிவுக்கடல்

உலகளவு அறிவை
கையளவு இடத்தில்
அடைகாத்து வைத்திருக்கும்
தாய்ப் பறவை

விடை தெரியா
வினாக்களுக்கு
விடை கொடுக்கும்
அடைய முடியா
கனாக்களுக்கு
மடை திறக்கும்

கல்வியே கோவில்
நூலகமே கருவறை-அங்கு
சென்று திரும்புவோர்
வாழ்க்கை திருமறை...!

– G.**கோதாவரி**
III Computer Science

## அனுபவம்

அனுபவம் என்பது
ஒரு சிறந்த வெற்றி
வெற்றி என்பது
ஒரு மனிதனின் அடையாளம்
அந்த அடையாளத்தைத் தருபவரே
அனுபவசாலிகள்
நம்மை விதைத்தவள் அன்னை
வளர்த்தவர் தந்தை
இவர்கள் இருவரும்
இரு உருவமாகி நம்மை காக்கின்றனர்
ஆனால்
ஒரு உருவமே இரு உறவுமாகிக்
கல்வியை விதைத்து
முழுமனிதனை முளைக்கச் செய்து
தந்தையாகிக் கண்டிக்கவும்
தாயாக அரவணைக்கவும்
முடியும் என்றால்
முடியும் தாய்தந்தையாகிய
ஓர் உருவ இரு உறவு
ஆசிரியர் என்னும் உறவே...

– A.**மாரியம்மாள்**
III - B.Sc., Computer Science




– V.**சாருஸ்ரீ**
I - B.Sc., Computer Science

# DEPARTMENT OF MATHEMATICS

## MATHEMATICS

M - Marvelous Multiplication
A - Amazing Addition
T - Thougtful Tangents
H - Hyponozing Hyphotenuss
E - Excellent Equations
M - Mesmerizing Measurements
A - Alluring Arithmetics
T - Thrilling Trignomentry
I - Interesting Integral
C - Creative Co-ordinates
S - Superb Stastics


*Mathematics is not a magic; It is a music; Play it, enjoy! Bloom!! and Flourish!!!*

## வாழ்க்கை

ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதிருங்கள்
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்
ஒரு சோகம் - தாங்கிக் கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்

**– பா.ர.கீர்த்தனா**
III Year - B.Sc.,Maths





**– த.சாருமதி**
I - B.Sc.,Maths

# வளமான இந்தியா

*"ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே;*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;*
*நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;"*

-*புற*நானூறு.

என்ற பொன்முடியாரின் வாக்கிற்கிணங்க தாம் தமது கடமைகளைச் செவ்வனே செய்து செழிப்பான இந்தியாவை உருவாக்குவது ஒவ்வொரு இந்தியரின் கடமையாகும். நமது நாட்டில் நிலவிவரும் சீரற்ற நிலைப்பாட்டை மேம்படுத்த விழிப்புடன் செயல்பட வேண்டும். வளமான இந்தியாவை உருவாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அரசியலில் வேண்டும் விழிப்புணர்வு**

*அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்*
*அஃதறி கல்லா தவர்.*

ஊழலும் கையூட்டும் நாட்டை எவ்வாறு சீரழிக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் இவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுக்காத எந்தவொரு கட்சியையும் நாம் ஆதரிக்கக் கூடாது. தேர்தல் சமயத்தில் சிறந்த கட்சியை விழிப்புணர்வோடு அரசியலில் தேர்வு செய்ய வேண்டும்.

**காந்தியின் தீர்மானம்:**

